சார்பு நீதிமன்றம், குளித்தலை
OS.No. **19 / 2015**

பெயர்: வீராசாமி (இரண்டாவது வாதி) வா.சா. 1
**தேதி 13.11.2024**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தாயாருக்கு தற்பொழுது என்ன வயது இருக்குமென்றால் 75 வயது இருக்கும். எனது பெற்றோர்களுக்கு திருமணம் ஆனதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எனது அத்தை பெயர், மாமா பெயர் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது தகப்பனாருக்கு திருமணம் செய்த சமயத்தில் தார தோசம் இருந்தாக கூறக்கூடிய சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது. எனது தகப்பனார் எனது தாயாரை முதலில் தாலி கட்டி திருமணம் செய்ததாகவும் அதே மேடையில் பிரதிவாதிகளின் தாயாரை தாலி கட்டி திருமணம் செய்ததாகவும் கூறிய சங்கதி யார் யாருக்கு தெரியும் என்கின்ற விவரத்தை பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் தான் சொன்னார். எனது தகப்பனார் இறக்கும் வரை அவரும் முதல் பிரதிவாதியும் சுமுகமான உறவில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். காளியப்பன் மேற்படி அவரின் தகப்பனார் மீது பாகபிரிவினை கோரி வழக்கு போட்ட சங்கதி தெரியும். காளியப்பன் அவர் தகப்பனார் மீது அவர்கள் முறையான வாரிசுகள் என்றும் அவர் பங்கு பாத்தியத்திற்கு விரோதமாக அவரது தகப்பனார் செயல்படக்கூடாது எனவும் அவருக்கு உரிய பாகத்தினை பிரித்து கொடுக்க கோரி தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான், எனது சகோதர சகோதரிகளோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு நடைபெற்ற சங்கதி எங்களுக்கு தெரியும். மேற்படி வழக்கில் நானோ எனது சகோதரகளும் அவசியமான கட்சிகார்கள் என கூறி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரகளும் முறையற்ற வகையில் பிறந்ததால் தான் மேற்படி வழக்கில் நாங்கள் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் காளியப்பனுக்கு உரிய பாகத்தை கொடுத்துவிடுவதாக எனது தகப்பனார் கூறியதால் தான் காளியப்பன் மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கு நடைபெற்ற கால கட்டத்தில் எனது தகப்பனார் எங்களது அனுசரனையில் இருந்தபடியால் காளியப்பன் வழக்கிற்கு பொய் கட்சி செய்துவந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு செய்யக்கூடாது என ஊர்காரர்களும் எனது தகப்பனாருக்கு அறிவுரை சொன்னார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் சிலவை பூர்விகம் சிலவை கிரையம் பெறப்பட்டவை. எனது தகப்பனார் இறக்கும் வரை தாவா சொத்துக்களை பொறுத்து அவர் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு பட்டா எனது பெயரிலும் காளியப்பன் பெயரிலும் கூட்டாக தான் உள்ளது என்றால் சரிதான்.

எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு நாளது தேதி வரை வாரிசு சான்றிதழ் பெறவில்லை. வாரிசு சான்றிதழ் கோரி காளியப்பன் தரப்பில் கடவூர் வட்டாட்சியரிடம் மனுக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த மனுவின் மீது வருவாய் துறையினர் விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் நானோ எனது சகோதரர்களோ எனது தகப்பனார் வாரிசு சான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. வாரிசு சான்றிதழ் இல்லாமல் பாக பரிவினை பத்திரம் பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். காளியப்பன் மற்றும் அவரது சகோதரரிகள் தான் உண்மையான வாரிசுதாரர்கள் என்பதால் வாரிசு சான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல. நானோ எனது சகோதரர்களோ வருவாய் துறையினரிடம் சான்றிதழ் வழங்ககூடாது என ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. காளியப்பனும் அவரது சகோதரிகளும் எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழை கேட்டு வருவாய் துறையினரிடம் முறையிட்டு கொண்டிருந்த பொழுதில் தான் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த விவரத்தை வருவாய் துறையினரிடம் தெரிவித்தால் அதனை கருத்தில் கொண்டு வாரிசு சான்றிதழுக்கு முட்டுக்கட்டை போடலாம் என்பதற்காக தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறை விசாரணையில் சரிவர விசாரணை செய்யாமல் காளியப்பன் கொடுத்த மனுவை உரிய உத்தரவு பிறப்பபிக்காமல் நீதிமன்ற பரிகாரம் மூலம் பெற அறிவுறுத்தியதன் பேரில் காளியப்பன் அவரது சகோதரிகளால் அ.வ.எண்.180/2017 ( அ.வ.எண். 102/2020) என்ற வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் எற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காளியப்பன் அவரது சகோதரிகள் சேர்ந்து வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த வழக்கில் நான் தரப்பினர் என்றால் இல்லை. காளியப்பன் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண்.102/2020 வழக்கில் நாங்கள் தான் உண்மையான வாரிசுதாரர்கள் என கூறி எதிர்கோரியுரிமை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரர்களும் முறையற்ற வகையில் பிறந்ததால் தான் மேற்படி எதிர்கோருயுரிமை எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அ.வ.எண் 102/2020 வழக்கில் நாங்கள் ஆஜராகி கட்சி செய்துவிட்டு தற்பொழுது கட்சி செய்யவில்லை என பொய்யாக வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் மாமுண்டி கவுண்டரின் மனைவி இல்லை என்றால் சரியல்ல. நான் கூறியது போன்று எனது தகப்பனார் எனது தாயாரை திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்து மாமுண்டி கவுண்டருக்கு பூர்விக சொத்து என்பதால் மாமுண்டி கவுண்டருக்கு முறைவழியாக பிறந்த காளியப்பனுக்கும் சரிசமமாக உரிமை உள்ளது என்றால் சரியல்ல. காளியப்பனுக்கு உரிய பாகத்தை தவிர்த்து மாமுண்டி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் எங்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பாகம் தவறானது என்றால் சரியல்ல. நான் அதிக பாகம் பெற வேண்டும் என்பதற்காக தவறான விபரங்கள் சொல்லி வழக்கு செய்துள்ள காரணத்தினால் காளியப்பன் மற்றும் 2,3 பிரதிவாதிகள் தங்களுக்குள்ளான பாக

உரிமையை பெற இந்த வழக்கினை எதிர்கோருயுரிமை கேட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆனால் மேற்படி காளியப்பன் 2,3 பிரதிவாதிகள் எதிர்கோருயுரிமை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கானது எனது தகப்பனார் காலத்திலேயே முடிவுற்ற படியால் 1 முதல் 3 பிரதிவாதிகள் பாகத்தை பொறுத்து உரிமை கோர முரண்தடை, முன் தீர்ப்புதடை பொருந்திவராது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கை நிரூபிக்க கூடியவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. எதிர்கோருயுரிமையின் படி 1 முதல் 3 பிரதிவாதிகள் சட்டபடி பாகம் பெற அறுகதை உடையவர்கள் என்றால் சரியல்ல. உண்மையான உறவுமுறைகளை மறைத்து போடப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.